உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.** 433/2025
C.N.R. No.TNDG03-001276-2025

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய
குற்ற எண்.66/2023 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

வாசுதேவன், வயது 58/2023
த/பெ. ராமசாமி நாயுடு,
குடித்தெரு, சீலப்பாடி,
திண்டுக்கல். …….. எதிரி.

எதிரி மீதான குற்றம் : இந்த வழக்கின் வாகன விபத்தில் காயம்பட்டு இறந்துபோன குமார் என்பவர் வாதி பிரபுவின் தந்தையாவார். கடந்த 27.01.2023ம் தேதி இந்த வழக்கின் இறந்துபோன குமார் அவர் வேலை செய்யும் டாஸ்மார்க் பாருக்கு செல்வதற்காக திண்டுக்கல் – திருச்சி மெயின் ரோடு NGO காலனி அரசு மதுபான கடை பிரிவு அருகே இரவு 8.30 மணியளவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது புறத்தில் நடந்து சென்றபோது, அதே ரோட்டில் அதே திசையில் வந்த TN 38 W 0587 Hero Honda Splender என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான எதிரி வாசுதேவன் என்பவர் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஆரன் அடிக்காமல் ஓட்டி வந்து நடந்து சென்ற குமார் மீது மோதியதால் ஏற்பட்ட வாகன விபத்தில் குமாருக்கு தலையின் பின்புறம் ஊமைக் காயமும்,

| | |
|---|---|
| | இடது கெண்டைக் காலில் இரத்தக் காயமும் ஏற்பட்டு அவருக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்த பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர், சிகிச்சை பலனின்றி 01.02.2023ம் தேதி இரவு 12.30 மணிக்கு மரணமடைய காரணமாக எதிரியின் குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. |
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் வாதுரை : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளி இல்லை. |
| தீர்ப்பு : | அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை சட்டப் பிரிவு 248(1) கு.வி.மு.ச–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| | இந்த வழக்கில், வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. |

இந்த வழக்கு என் முன்பாக 26.03.2026–ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் வழக்கறிஞர் திரு. M.விஜயேந்திரன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் திருமதி.S.விஜயலட்சுமி அவர்களும், முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில்

விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 26.03.2026-ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-

இந்த வழக்கின் வாகன விபத்தில் காயம்பட்டு இறந்துபோன குமார் என்பவர் வாதி பிரபுவின் தந்தையாவார். கடந்த 27.01.2023ம் தேதி இந்த வழக்கின் இறந்துபோன குமார் அவர் வேலை செய்யும் டாஸ்மார்க் பாருக்கு செல்வதற்காக திண்டுக்கல் - திருச்சி மெயின் ரோடு NGO காலனி அரசு மதுபான கடை பிரிவு அருகே இரவு 8.30 மணியளவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது புறத்தில் நடந்து சென்றபோது, அதே ரோட்டில் அதே திசையில் வந்த TN 38 W 0587 Hero Honda Splender என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநராக எதிரி வாசுதேவன் என்பவர் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஆரன் அடிக்காமல் ஓட்டி வந்து நடந்து சென்ற குமார் மீது மோதியதால் ஏற்பட்ட வாகன விபத்தில் குமாருக்கு தலையின் பின்புறம் ஊமைக் காயமும், இடது கெண்டைக் காலில் இரத்தக் காயமும் ஏற்பட்டு அவருக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்த பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர், சிகிச்சை பலனின்றி 01.02.2023ம் தேதி இரவு 12.30 மணிக்கு மரணமடைய காரணமாக எதிரியின் குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் தண்டிக்கத் தக்க குற்றம் புரிந்துள்ளார் என திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. திண்டுக்கல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1–ல் எதிரி ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன.

3. எதிரியிடம் குற்றப் பத்திரிக்கையில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் விளக்கி கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கூறினார்.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை, மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :–</u>**

i) நிகர்நிலை புகார்தாரரான அ.சா.1 பிரபு என்பவர் இந்த வழக்கு சம்பவத்தில் இறந்துபோன குமார் என்பவர் தனது தகப்பனார் என்றும், சுமார் 2 வருடத்திற்கு முன்பு தனது தகப்பனார் சீலப்பாடி பைபாஸ் ரோட்டில் உள்ள 7 மாடி கட்டிடத்திற்கு அருகே உள்ள ஒயின் சாப்பிற்கு குப்பை அள்ளுவதற்காக சென்றிருந்தபோது, சுந்தர்ராஜ் என்பவர் தனக்கு போன் செய்து இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், தனது தகப்பனாரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் தகவல் சொன்னார் என்றும், தகவல் அறிந்து தான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, தனது தகப்பனாருக்கு தோள்பட்டை மற்றும் தலையில் காயம்பபட்டிருந்ததாகவும், பின்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க தாலுகா காவல் நிலையத்தில் புகார்

கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், தனது அப்பாவை மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், அவருக்கு மூளையில் இரத்தக் கசிவு இருந்ததால் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ii) அ.சா.2 மணி என்பவர் இறந்துபோன குமாரின் மகனாவார். சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்றது குறித்து சாட்சியமளித்துள்ளார். அ.சா.3 லோகநாதன் என்பவர் இறந்துபோன குமாருடன் வேலை செய்தவர் ஆவார். சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 8 மணியளவில் குமார் தன்னுடன் வேலை செய்து கொண்டிருந்தபோது, டீ சாப்பிட்டு வருவதாக கூறிவிட்டு சென்றார் என்றும், அப்போது சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றபோது, குமார் இருசக்கர வாகனம் இடித்து அடிபட்டு கிடந்தார் என்றும், ஆஜர் எதிரியைத் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ஜெய்கணேசன், சார்பு ஆய்வாளர் கடந்த 28.01.2023ம் தேதி திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, காவல் நிலையத்தில் பணிபுரிந்த தலைமை காவலர் திரு.வேலுமணி என்பவர் திண்டுக்கல் காவல் நிலைய குற்ற எண்.66/2023, சட்டப் பிரிவுகள் 279, 337 இ.த.சவாக அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அன்றைய தினமே திண்டுக்கல் – திருச்சி ரோடு, NGO காலனி அரசு மதுபானக்கடை பிரிவு அருகே சம்பவ இட சாட்சிகளான பிரபு மற்றும் மணி ஆகியோர் முன்னிலையில் மதியம் 14.30 மணிக்கு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்து, சம்பவ இடம் மற்றும் பிற சாட்சிகளான சுந்தர் ராஜன், லோகநாதன், பிரபாகரன், ஜோசப், தலைமை காவலர் திரு.வேலுமணி ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கில் காயம்பட்ட குமார் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனையில்

சிகிச்சை பலனின்றி 01.02.2023ம் தேதி மதியம் 12.50 மணிக்கு இறந்துவிட்டதாக பிற்பகல் 14.40 மணிக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச.வில் இருந்து, 279, 304(A) இ.த.ச. வாக அ.சா.ஆ.5 சட்டப்பிரிவு மாறுதல் செய்து அறிக்கை சமர்ப்பித்தாகவும், இறந்துபோன குமார் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி மதுரை, மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவ பேராசிரியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டும், அதன்பின்பு 02.02.2023ம் தேதி காலை 11.00 மணிக்கு மதுரை, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அ.சா.ஆ.7 பிரேத விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 13.00 மணிக்கு முடிக்கப்பட்டது என்றும், விபத்து பதிவேடு அ.சா.ஆ. 6 என்றும், அதன்பிறகு பிரேதத்தை நல்லடக்கம் செய்ய அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், மேற்கொண்டு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

iii) அ.சா.5 உலகநாதன், காவல் ஆய்வாளர் திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. ஜெய்கணேஷ் அவர்களையும், காவல் ஆய்வாளர் திரு. பாலாண்டி அவர்களையும் தனக்கு நன்கு தெரியும் என்றும், அவர்கள் இருவரும் தற்போது வேறு மாவட்டத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அவர்களுடைய கையெழுத்து மற்றும் கையொப்பங்கள் தனக்கு நன்கு பரிட்சையம் என்பதால், வழக்கின் காலதாமத்தை தவிற்கும் பொருட்டு வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், உதவி ஆய்வாளர் கடந்த 28.01.2023ம் தேதி பகல் 13.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, தெப்பகுளத்துப்பட்டியைச் சேர்ந்த குமார் மகன் பிரபு என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.

66/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.ச.வின் படி வழக்கு பதிவு செய்துள்ளார் என்றும், அவர் வழக்கின் முதல் விசாரணையை மேற்கொண்ட போது விபத்தில் காயம்பட்ட குமார் என்பவர் மதுரை, அரசு இராஜாஜி மருத்துவனையில் சிகிச்சையில் இருந்தபோது, அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டபடியால், சட்டப்பிரிவு 304 (A) இ.த.ச.வின் படி பிரிவு மாறுதல் செய்துள்ளார் என்றும், பின்னர் 01.02.2023ம் தேதி பகல் 11.00 மணிக்கு மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக சென்று விபத்தில் இறந்துபோன குமார் என்பவரின் பிரேதத்தின்மீது, சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு, அ.சா.ஆ.8 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களிடம் வழக்கு கோப்பை சமர்பித்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் சாட்சிகளை விசாரணை செய்தபோது, உதவி ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளை அவரிடமும் தெரிவித்ததால் மேற்கொண்டு வாக்குமூலம் பதிவு செய்யாமல், விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 38 W 0587 இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியுள்ளார் என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. இளங்கோ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றுள்ளார் என்றும், விபத்தில் காயம்பட்டு இறந்துபோன குமார் என்பவரின் பிரேதத்தை பிரேத கூறாய்வு மேற்கொள்வதற்காக தலைமை காவலர் திரு. செல்வராஜ் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியுள்ளார் என்றும், பிரேத கூறாய்வு மேற்கொண்ட மதுரை, அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. முகமத் நசிம் என்பவரை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத கூறாய்வு அறிக்கை பெற்றுள்ளார் என்றும், 23.03.2023ம் தேதி 11.15 மணிக்கு இவ்வழக்கு எதிரியான ஆஜர் எதிரி வாசுதேவன் என்பவரை காவல் நிலையம் முன்பாக காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார் என்றும், ஆய்வாளர் அவர்கள் வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து,

அவர்களுடைய புலன் விசாரணையை முடித்துக் கொண்டு வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரியிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரி அரசுத்தரப்பு சாட்சி கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தமது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலையான அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் முன்வைத்த வாதங்களும், எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் முன் வைத்த வாதங்களும் இந்நீதிமன்றத்தால் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன.

8. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

## தீர்வு:–

9. அரசுதரப்பு வழக்கில், இந்த வழக்கின் வாகன விபத்தில் காயம்பட்டு இறந்துபோன குமார் என்பவர் வாதி பிரபுவின் தந்தையாவார். கடந்த 27.01.2023ம் தேதி இந்த வழக்கின் இறந்துபோன குமார் அவர் வேலை செய்யும் டாஸ்மார்க் பாருக்கு செல்வதற்காக திண்டுக்கல் – திருச்சி மெயின் ரோடு NGO காலனி அரசு

மதுபான கடை பிரிவு அருகே இரவு 8.30 மணியளவில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டின் இடது புறத்தில் நடந்து சென்றபோது, அதே ரோட்டில் அதே திசையில் வந்த TN 38 W 0587 Hero Honda Splender என்ற இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுநரான எதிரி வாசுதேவன் என்பவர் அதிக வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஆரன் அடிக்காமல் ஓட்டி வந்து நடந்து சென்ற குமார் மீது மோதியதால் ஏற்பட்ட வாகன விபத்தில் குமாருக்கு தலையின் பின்புறம் ஊமைக் காயமும், இடது கெண்டைக் காலில் இரத்தக் காயமும் ஏற்பட்டு அவருக்கு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்த பின்பு மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர், சிகிச்சை பலனின்றி 01.02.2023ம் தேதி இரவு 12.30 மணிக்கு மரணமடைய காரணமாக எதிரியின் குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

10. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை, மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

11. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கில் முன்னிலைப் படுத்தப்பட்ட சாட்சியங்களும், சான்றாவணங்களும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டன. இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு அவையும் நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு வழக்கை பொறுத்த வரையில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைப் பொறுத்து அதை எதிரி தான் செய்தார் என்பதை

நிரூபிப்பதற்கு முன்னிலைப் படுத்தப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 பிரபு என்பவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தது பற்றியும், விபரம் அறிந்து புகார் கொடுத்தது குறித்தும் சாட்சியம் அளிப்பவராகவும், அ.சா.2 சம்பவம் குறித்து கேள்விப்பட்டது குறித்தும், அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்தும், அ.சா.4 முதல் கட்ட விசாரணை மேற்கொண்டு சட்டப்பிரிவு மாறுதல் செய்த விபரம் பற்றியும் கூறும் சாட்சியாகவும், வழக்கைப் பொறுத்து இறுதி கட்ட விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அ.சா.5 ஆகியோரும் சாட்சிப் பட்டியலில் காட்டப்பட்டு அதில் கண்டுள்ளவாறு விசாரணை செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

12. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை உறுதி செய்வதற்கு சாட்சியாக சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக காட்டப்பட்டுள்ள அ.சா.3–ன் சாட்சியம் இந்த வழக்கின் மிக முக்கியமான சாட்சியமாகும், அவரது சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், சுமார் 2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு சுமார் 8.00 மணியளவில் குமார் என்பவர் தன்னுடன் பாரில் வேலை செய்து கொண்டிருந்தபோது, டீ சாப்பிட்டு வருவதாக கூறிவிட்டு சென்றார் என்றும், அப்போது சத்தம் கேட்டு தானும், சுந்ததராஜனும் வெளியே வந்து பார்த்தபோது, தலையில் காயம்பட்டு கிடந்தார் என்றும், இருசக்கர வாகனம் இடித்து அடிபட்டு கிடந்தார் என்றும், இருசக்கர வாகனத்தை ஓட்டியவரை பார்த்தால் அடையாளம் காட்டத் தெரியாது என்றும், ஆஜர் எதிரியைத் தெரியுமா என்றால், சம்பவம் நடந்த இடத்தில் 15 பேர் நின்று கொண்டிருந்தனர் என்றும், அதில் எதிரியும் நின்று கொண்டிருந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்திலும், தான் சம்பவத்தை நேரடியாக பாக்கவில்லை என்றும், பாரின் உள்ளே இருந்ததாகவும், சத்தம் கேட்டுதான் வந்து பார்த்ததாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து சத்தம் கேட்டு தான்

சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்துள்ளார் என்பது தெரிய வருகிறது. விபத்து சம்பவம் நடந்தது என்பதற்கு அவர் ஒரு சாட்சியே தவிர, வழக்கின் எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக் குறைவால் தான் மேற்படி விபத்து சம்பவம் நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்கான சாட்சியமாக அவரது சாட்சியம் அமையவில்லை. மேலும், எதிரியின் அடையாளம் குறித்து தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து, அவரது சாட்சியம் அரசுதரப்பு வழக்கிற்கு ஆதரவாக அவரது சாட்சியம் அமையவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

13. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் விபத்து சம்பவத்தில் இறந்துபோன குமாரின் மகன்கள் ஆவார்கள். அவர்கள் சம்பவம் குறித்து கேள்விப்பட்டு சென்றது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.4, அ.சா.1 கொடுத்த புகாரினைப் பெற்று வழக்கு பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 புலன் விசாரணை அதிகாரியின் குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்கையில், சம்பவ இடத்தில் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ளன என்றால் சரிதான் என்றும், மேற்படி கடைகள், வீடுகள் ஆகிவற்றில் இருந்த நபர்களை புலன் விசாரணை அதிகாரி சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும் ஏற்றுக் கொண்டுள்ளார். மேற்படி சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்யாததற்கு அரசு தரப்பில் விளக்கம் எதுவும் இல்லை.

14. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. விபத்து சம்பவத்தைப் பொறுத்து, அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்ததில், எதிரியின் கவனக்குறைவாலும், அதிவேகத்தாலும் தான் விபத்து ஏற்பட்டது என்பது குறித்து உறுதிப்படுத்தும் சாட்சியமாக அமையாததால், மேற்படி மூவரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு

ஆதரவாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்று ஆவணங்களை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்ததில், எதிரி தனது அஜாக்கிரதை, கவனக் குறைவு, அதிவேகம் ஆகியவற்றால் தான் விபத்து ஏற்படுத்தி குமார் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்பது தெளிவாகிறது. இந்த வழக்கை பொறுத்த வரையில், ஒரு விபத்து நடந்து இருக்கிறது என்பதும், அதில் ஒரு நபர் இறந்திருக்கிறார் என்பதும் அரசு தரப்பில் உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால், விபத்து சம்பவத்தைப் பொறுத்த வரையில், அதற்கு இந்த எதிரிதான் முழுமையான காரணம் என்பதை இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. எனவே, அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப் படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.5 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16. இறுதியாக மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும்

சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு 248(1) கு.வி.மு.ச–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

17. இந்த வழக்கில், வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் மார்ச் மாதம் 26–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA
Ex. P8
Digitally signed by V DEEPA
Date: 2026.04.01 16:09:04 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

**<u>அரசுத் தரப்புச் சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பிரபு |
| அ.சா.2 | திரு. மணி |
| அ.சா.3 | திரு. லோகநாதன் |
| அ.சா.4 | திரு. ஜெய்கணேஷ், சார்பு ஆய்வாளர் |
| அ.சா.5 | திரு. உலகநாதன், காவல் ஆய்வாளர் |

**<u>அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.01.2023 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 28.01.2023 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 28.01.2023 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 28.01.2023 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 01.02.2023 | தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.6 | 27.01.2023 | தேதியிட்ட விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.7 | 02.02.2023 | தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | 01.02.2023 | தேதியிட்ட பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 23.03.2023 | தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை |

**அரசுதரப்பு சான்று பொருள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :** இல்லை

**எதிரி தரப்பு சான்று பொருள் :** இல்லை

குறிப்பு:–

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. இந்த வழக்கில் சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை.

V DEEPA
Ex. P8
Digitally signed by V DEEPA
Date: 2026.04.01 16:08:56 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.